www.e-kalvi.com

# வலயக்கல்வி அலுவலகம் - துணுக்காய்
# முதலாம் தவணைப் பரீட்சை – 2020

**பாடம்:- கிறிஸ்தவம்**

சுட்டெண்:......................   **தரம் – 06**   **நேரம் : 02 மணி**

## பகுதி - I

**01. மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. படைப்புக்களில் மேன்மைக்க கருதப்படுவது
1. மனிதன்   2. இறைவன்   3. விலங்கு   4. பறவை

2. இறைவன் எத்தனையாவது நாள் ஓய்ந்திருந்தார்.
1. 07   2. 06   3. 10   4. 4

3. கடவுளின் நற்செய்தியைக் கொண்டு வரும் தூதர்
1. மிகாவேல்   2. காபிரியேல்   3. தானியேல்   4. வானதூதர்

4. இயேசவின் பிறப்புச் செய்தி முதலில் யாருக்கு அறிவிக்கப்பட்டது.
1. பெண்கள்   2. ஞானிகள்   3. இடையர்கள்   4. சிறுவர்கள்

5. இயேசு எருசலேம் கோயிலுக்கு எத்தனையாவது வயதில் சென்றது
1. 12   2. 5   3. 40   4. 30

(5x 2 = 10 புள்ளிகள்)

**02. இடைவெளி நிரப்புக.**

(பெண்களுக்கு, யூதரின்அரசன், பாஸ்கா, சீமோன், இறைசாயல்)

1. ஆண்டு தோறும் எருசலேம் கோவிலில் .................... விழா கொண்டாடப்படும்.
2. ஆளுனர் பிலாந்துவால் ........................... என குற்றம் சாட்டப்பட்டது
3. மனிதன் .............. படைக்கப்பட்டான்.
4. இயேசுவின் சிலுவையை சுமப்பதற்கு சிரேன் ஊர் ..................... உதவினார்.
5. இயேசுவின் உயிர்ப்பின் செய்தி ...................... முதலில் கிடைத்தது.

(5x 2 = 10 புள்ளிகள்)

**03. சரியாயின்( ✓ ) எனவும் பிழையாயின் (✕) எனவும் அடையாளமிடுக.**

1. உலகம் ஆறு நாட்களில் படைக்கப்பட்டது ( )
2. இறைப்படைப்புக்களை நாம் பாதுகாக்க வேண்டும் ( )
3. கடவுள் மனிதனை 7 ஆம் நாளில் படைத்தார் ( )
4. நாம் பிறருடன் சகோதரத்துவத்துடன் பழக வேண்டும் ( )
5. இயேசு பெற்றோருக்கு கீழ்ப்படிந்து நடந்து கொண்டார் ( )

(5x 2 = 10 புள்ளிகள்)

**04. தொடர்பு படுத்துக.**

| | |
|---|---|
| 1. முதல் பெற்றோர் | விண்மீன் |
| 2. இயேசுவின் பிறப்பு | 3 ம் நாள் |
| 3. 5 ம் நாள் படைப்பு | ஆதாம், ஏவாள் |
| 4. ஞானிகள் | பெத்லகேம் |
| 5. இயேசுவின் உயிர்ப்பு | கடல்வாழ்வன, பறவைகள் |

(5x2 = 10 புள்ளிகள்)

## பகுதி - II

**எல்லா வினாக்களுக்கு விடை தருக.**

**01.**

1. இறைவன் படைப்புக்கள் சிலவற்றைத் தருக.
2. விலங்குகளிடம் காணப்படும் நற்பண்புகள் 4 தருக.
3. இறை படைப்புக்களில் பயன்பாடுகளை எழுதுக.

(3+4+3 = 10 புள்ளிகள்)

**02.**

1. கடவுள் மனிதனை ஏன் ஏதேன் தோட்டத்திற்கு குடியிருக்கச் செய்தார்.
2. இறைபடைப்புக்கள் எவ்வாறு அழிக்கப்படுகின்றன?
3. அவ்வழிகள் ஒவ்வொன்றையும் தடுக்ககூடிய நடவடிக்கைகள் எவை?

(3+4+3 = 10 புள்ளிகள்)

**03.**

1. இயேசுவின் பிறப்பை அறிந்து குழந்தை இயேசுவுக்கு ஞானிகள் கொடுத்த பரிசில்கள் எவை?
2. நத்தார் தினத்தில் நாம் செய்யக் கூடிய நற்காரியங்கள் எவை?

(5+5 = 10 புள்ளிகள்)

**04.**

1. நீர் கடவுளுடனான தொடர்பை வளர்க்கும் சந்தர்ப்பங்கள் 5 தருக.
2. "நான் எனது தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா? " யாரால் யாருக்கு கூறப்பட்டது?

(5+5 = 10 புள்ளிகள்)

**05. சிறுகுறிப்பு எழுதுக.**

1. படைப்புக்கள்
2. நற்பண்புகள்
3. இயேசுவின் பிறப்பு
4. ஆதாம் ஏவாள்

(4x5 = 20 புள்ளிகள்)